(ஆ) அத்தகைய வேலையாள், எழுத்திலுள்ள சட்டம் எதனுலும் ஒழுங்காக்கப்படாத வேதனத்தை அல்லது கூலியைப் பெறும் வேலையாளாயிருக்குமிடத்து, அவர் மாத வேதனம் கொடுக்கப்படும் வேலையாளா யிருப்பின், இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் கொடுக்கற்பாலதான படியானது அம்மாதத்தில் அத்த கைய வேலையாளுக்குரிய வேதனத்தின் இருபது நூற்றுவீதத்தினும் குறையாததும் அவர் நாட் கூலி கொடுக்கப்படும் வேலையாளாயிருப்பின் அம்மாதத்தில் வேலைசெய்த ஒவ்வொரு நாளுக்கும் அத்தகைய வேலையாளுக்குரிய நாட்கூலியின் இருபது நூற்றுவீதத்தினும் குறையாததுமான ஒரு பணத் தொகையாயிருத்தல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறுயினும், இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் கொடுக்கற்பாலதான பணத்தொகை மாதம் ஒன்றிற்கு ஐம்பது ரூபாவுக்கு மேற்படுதலாகாது.

(இ) அத்தகைய வேலையாள், 1974, திசெம்பர் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னரே முதல் முறையாக வேலைக்கமர்த்தப்படுபவரும் எழுத்திலுள்ள சட்டம் எதனுலும் ஒழுங்காக்கப்படாத வேதனத்தை அல்லது கூலியைப் பெறுபவருமான ஒரு வேலையாளாயிருக்குமிடத்து இந்த ஒழுங்கு விதிகளின் கீழ் கொடுக்கற்பாலதான படியானது, அத்தகைய வேலையாள் மாத வேதனம் பெறும் வேலையாளாயிருப்பின், முதலாம் மாதத்தில் அவருக்குரிய வேதனத்தின் இருபது நூற்றுவீதத் தினும் குறையாததும், அவர் நாட்கூலி பெறும் வேலையாளாயிருப்பின் அவர் வேலைக்கமர்த்தப்பட்ட முதலாம் மாதத்தின்போது வேலைசெய்த ஒவ்வொரு நாள் தொடர்பிலும் அத்தகைய வேலையாளுக் குரிய கூலியின் இருபது நூற்றுவீதத்தினும் குறையாததுமான ஒரு பணத் தொகையாயிருத்தல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறுயினும், இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் கொடுக்கற்பாலதான பணத்தொகை யானது மாதம் ஒன்றிற்கு ஐம்பது ரூபாவுக்கு மேற்படுதலாகாது ;

(ஈ) (i) அத்தகைய வேலையாள், துண்டுவேலை வீதத்தில் வேலைக்கமர்த்தப்பட்டிருக்குமிடத்து, இந்த ஒழுங் குவிதிகளின்கீழ் அவருக்குக் கொடுக்கற்பாலதான படியானது, அம்மாதத்தின்போது அத்தகைய துண்டுவேலை வீதத்தில் அவருக்கு உரிய கூலியின் இருபதுநூற்று வீதத்திலும் குறையாத ஒரு பணத்தொகையாயிருத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறுயினும், இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் கொடுக்கற்பாலதான பணத்தொகை யானது மாதம் ஒன்றுக்கு ஐம்பது ரூபாவுக்கு மேற்படுதலாகாது ;

(ii) ஒரு வேலையாள் 1974, திசெம்பர் மாதம் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னரே முதல் முறையாக துண்டுவீத அடிப்படையில் வேலைக்கமர்த்தப்படுமிடத்து, இந்த ஒழுங்குவிதி களின்கீழ் அவருக்குக் கொடுக்கற்பாலதான பணத்தொகையானது, அவர் வேலைக்கமர்த்தப்பட்ட முதலாம் மாதத்தின்போது துண்டுவேலை வீதத்தில் அவருக்குரிய கூலியின் இருபது நூற்று வீதத்திற்குக் குறையாத பணத்தொகையாயிருத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறுயினும், இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் கொடுக்கற்பாலதான பணத்தொகை யானது மாதம் ஒன்றிற்கு ஐம்பது ரூபாவுக்கு மேற்படுதலாகாது.

(2) அவரின் மொத்த மாதச் சம்பாத்தியம் எண்ணூறு ரூபாவுக்கு மேற்படவும் ஆனுல் எண்ணூற்றியம்பது ரூபாவுக்கு குறைவாகவும் உள்ள வேலையாள் ஒருவரைக் கொண்டுள்ள தொழில் தருநர் ஒவ்வொருவரும் 1974 ஏப்பிறல் மாதம் உட்பட ஒவ்வொரு மாதம் தொடர்பிலும், எண்ணூற்றியம்பது ரூபாவுக்கும் அவ்வேலையாளால் அம்மாதத்துக்கான வேதனமாக அல்லது கூலியாகப் பெறப்பட்ட தொகைக்கும் இடையிலான வித்தியாசத்துக்குச் சமமானதொரு தொகையை அவ்வேலையாளுக்கு அம்மாதத்துக்குப் படியாக வழங்குதல் வேண்டும்.

5. ஒழுங்குவிதி 4 இல் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் வேலையாளுக்கு—

(i) ஏதேனும் கூட்டு உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க அல்லது அவற்றின் அடிப்படையில், அல்லது கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 10(2) என்னும் பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப் பட்ட கட்டளையின் நியதிகளுக்கிணங்க, மீண்டும் செலுத்தற்குரியதாகா வாழ்க்கைச் செலவுப் பணிக் கொடை செலுத்தப்படுமிடத்து ;

அல்லது

(ii) கொழும்புப் பாவனையாளர் சுட்டிக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படி செலுத்தப்படு மிடத்து,

அத்தகைய வேலையாளுக்கு அத்தகைய பணிக்கொடையாக அல்லது விடயத்துக்கேற்ப அத்தகைய படியாகச் செலுத்தப் படற்குரிய தொகையிலிருந்து, தொழில் தருநர்—

(அ) அத்தகைய வேலையாளின் அம்மாதத்துக்கான மொத்தச் சம்பாத்தியம் நானூறு ரூபாவுக்கு மேற் படாதவிடத்து அத்தகைய வேலையாளின் அவ்வேதனத்தின் அல்லது கூலியின் பத்து நூற்று வீதத்துக்குச் சமமான ஒரு தொகையை, அல்லது முப்பது ரூபா தொகையை, இவற்றுள் எது குறைவானதோ அதனைக் கழிக்கலாம் : அத்துடன்

(ஆ) அத்தகைய வேலையாளின் அம்மாதத்துக்கான மொத்தச் சம்பாத்தியம் நானூறு ரூபாவுக்கு மேற்படு மிடத்து ஐம்பது ரூபாத் தொகையைக் கழிக்கலாம்.

**6.** இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் எந்தத் தொழிலிலுமுள்ள வேலையாள் எவருக்கும் கொடுக்கற்பாலதான பணத் தொகையானது, எழுத்திலுள்ள சட்டம் எதனதும் நோக்கங்களுக்காக, அவரது கூலியின் பகுதியாய் அமைவதாகக் கருதப்படுதல் வேண்டும்; அதற்கிணங்க, தொழில்தருநர், அத்தகைய வேலையாளின் கூலியைச் கொடுக்க வேண்டிய காலத்திலும் அத்தகைய பணத்தொகையைக் கொடுத்தல் வேண்டும்.

**7.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்து நாலாம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு நேரே முன்னர், ஏதேனும் தொழிலில் தொழில் தருநர் எவராலும் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு வேலையாளும், அத்தகைய தொழில்தருநரின் வேலையாளாகத் தொடர்ந்திருக்கும் அவ்வளவு காலம்வரை, 1974 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு நேரே முற்போந்த நாளன்று அத்தகைய வேலையாள் துய்த்த வேதனம், படி அல்லது பணத்திலான ஏனைய கொடுப்பனவுகளிலும் பார்க்க, (அவை எப்பெயர் கொண்டு அல்லது குறிப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படினுஞ்சரி) வாய்ப்புக் குறைந்தனவல்லாத வேதனம், படி அல்லது ஏனைய பணக் கொடுப்பனவுகள் தொடர்பான அத்தகைய நியதிகள், நிபந்தனைகள் ஆகியவற்றின்மீது அத்தகைய தொழில் தருநரால் அவ்வாறு தொடர்ந்து வேலைக்கமர்த்தப்படல் வேண்டும்; இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் கொடுக்கற்பாலதான படியானது அத்தகைய வேதனம், படி அல்லது ஏனைய கொடுப்பனவுகளைவிட மேலதிகமாக இருத்தல் வேண்டும்.

**8.** நான்காம் ஒழுங்குவிதியின்கீழ் வேலையாள் ஒருவருக்குக் கொடுக்கற்பாலதான ஏதேனும் பணத்தொகையைத் தொழில்தருநர் ஒருவர் அவ்வேலையாளுக்குக் கொடுக்கத் தவறியமை காரணமாக தவறொன்றுக்கு அத்தகைய தொழில்தருநர் நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதனமேல், அத்தகைய தவறுக்கென நீதிமன்றம் விதித்திருக்கக்கூடிய வேறேதேனும் தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக, கட்டளையிற் குறித்துரைக்கப்படும் அத்தகைய காலத்தினுள் அத்தகைய வேலையாளுக்கு அத்தகைய பணத்தொகையைக் கொடுக்கும்படி நீதிமன்றமானது அத்தகைய தொழில்தருநருக்குக் கட்டளையிடலாம்; அத்தகைய பணத்தொகை அவ்வாறு கொடுக்கப்படாவிடின் அப்பணம் நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றுற்போல், நீதிமன்றத்தின் கட்டளையின் மூலம் அத்தகைய பணத்தொகை அறவிடப்படலாம்.

**9.** இந்த ஒழுங்குவிதிகளில், சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

" ஆணையாளர் " " தொழில்தருநர் ", " கூலி " என்பன, முறையே (136 ஆம் அத்தியாயமான) சம்பள நிருணயச்சபைக் கட்டளைச் சட்டத்தில் உள்ள அதே பொருளினைக் கொண்டிருத்தல் வேண்டும்;

" கூட்டு உடன்படிக்கை " என்பது, கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தில் உள்ள அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

" சம்பத்தியம் " என்பது, 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டதாயிருத்தல் வேண்டும்;

" தொழில் " என்பது, தொழில்தருநர் ஒருவரால் அல்லது வேலையாள் ஒருவரால் கொண்டு நடாத்தப்படும், புரியப்படும், அல்லது செய்யப்படும் கைத்தொழில், வியாபாரம், பொறுப்புமுயற்சி, செய்தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் எதையும் உள்ளடக்குவதோடு, ஏதேனும் தொழிலின் பிரிவையும் அல்லது அதில் ஏதேனும் பணியையும் அல்லது செய்முறையையும் உட்படுத்தும்; ஆனால் தொழில் தருநர் என்ற தன்மையில் மூலதனம் முழுவதும் அரசாங்கத்தினால் அளிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவினால் கொண்டு நடாத்தப்படும் அல்லது முக்கியமாக, பாலியத் தவறாளிகளுக்கு அல்லது அநாதைகளுக்கு அல்லது இலம்பாடுற்றவர்களுக்கும் வாய்பேச முடியாதவர்களுக்கும், காது கேளாதவர்களுக்கும் அல்லது கண் தெரியாதவர்களுக்கும் கைத்தொழிற் பயிற்சி அளிக்கும் நோக்கத்திற்காகக் கொண்டு நடாத்தப்படும் கைத்தொழில், வியாபாரம், அல்லது பொறுப்பு முயற்சி எதனையும் உட்படுத்தாது;

" வேலையாள் " என்பது தொழில், கைத்தொழில், வியாபாரம், செய்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் எதிலும் வேலை எதனையும் புரிவதற்காக வாய்மொழி மூலமாக, எழுத்து மூலமாக, வெளிப்படையாக, அல்லது உட்கிடையாகச் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்கீழ் வேலைக்கமர்த்தப்பட்ட ஆள் ஒருவர் எனப் பொருள்படும்; ஆனால் அது வீட்டுவேலையாளொருவரை அல்லது தொழிலதருநரின் சொந்தக் கார்ச் சாரதியை உட்படுத்தாது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.